ஆதை திறந்தால் வாழ்வாதாரம் சிறக்கும் என்று கூறினார்கள். வாழ்வாதாரம் சிறக்காது. இங்கு மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கொட்டக்குடி ஆறு, கெட்ட குடி ஆறாக மாறிவிட்டது. குப்பைகள் கொட்டும் இடமாக மாறிவிட்டது. சாக்கடை கலக்கும் இடமாக மாறிவிட்டது. கொட்டக்குடி இப்பொழுது கெட்ட குடியாக மாறிவிட்டது. மேற்கு தொடர்ச்சி மலை முழுமையாக கல்குவாரி ஆகிவிட்டது. ராணிமங்கம்மாள் சாலை போக்குவரத்து முழுமையாக டாரஸ் லாரி போக்குவரத்தாக மாறிவிட்டது. நீரோடைகள் அனைத்தும் சாலைகளாக மாறிக்கொண்டிருக்கிறது. இது இப்படியே சென்றால் நம் வாழ்வாதாரம் நமது பிள்ளைகள் வாழ்வாதாரம் பாதிக்கும். முன்பு கூறுவார்கள், "சோறு கிடைக்காது, மண்ணைத்தான் திங்கவேண்டும் என்று". இப்படியே சென்றால் மண் கூட இருக்காது.

ஏதோ குவாரிகாரர்கள் சொல்லி ஆட்களைக் கூப்பிட்டு இருக்கிறார்கள், சரி, இதனால் வாழ்வாதாரம் சிறக்கும் என்று தயவு செய்து சொல்லவேண்டாம். நம் மக்கள், வருங்காலத்தில் நமது பிள்ளைகள், நமது பேரன் பேத்திகள் வாழ முடியாது. இப்போது கொட்டக்குடி ஆற்றில் தனியாக பாலம் அமைத்து அவர்கள் இஷ்டத்திற்கு விளை நிலங்களை முழுமையாக மாற்றியமைத்துக் கொண்டார்கள். அவர்கள் சொற்ப விலைக்கு விளைநிலங்களை விவசாயிகளிடம் பேசி 100 சதவிகிதத்தில் 70 சதவிகிதம் அவர்கள் வசம் வைத்து விட்டார்கள். இப்போது ஆற்றில் ஊத்து தோண்டி தண்ணீர் குடிக்க முடியுமா உங்களால் ? இப்பொழுது தண்ணீர் வீட்டுக்கே வருவதால் உங்களுக்கு உதாசீனமாக உள்ளது. இந்த கொட்டக்குடிக்கு தண்ணீர் வருவதால் நீங்கள் அந்த தண்ணீரில் குளிக்கலாம். குடிக்க முடியுமா அந்த தண்ணீரை. முதலில் ஊற்றில் அழகாக குளிக்கலாம். நாளடைவில் வீரப்பன் கூறியது மாதிரி "இந்த நாடும் நாட்டு மக்களும் நாசமாக போகப்போவது கண்கூடாக தெரிகிறது".

மேற்கு தொடர்ச்சி மலையில் அந்த கடைசியில் இருந்து இந்த கடைசி வரைக்கும் கல்குவாரி அதிகமாக இருக்கிறது. போக்குவரத்து அதிகமாக இருக்கிறது. பின்னாடி இருசக்கர வாகனத்தில் செல்ல முடியாது. கண்களில் அவ்வளவு தூசி வருகிறது. கண்ணாடி போட்டு தான் செல்ல வேண்டும். இங்குள்ள பாமர விவசாயிகள் இங்கு இருக்கும் தோட்டத்திற்கு தலைக்கவசம் போட்டா வருவார்கள் ? அவ்வளவு நாசமாகிப் போய்க் கொண்டிருக்கிறது. தயவுசெய்து கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வந்தோம் ஏதோ கவனித்தார்கள் என்று போகாமல் உண்மையை சொல்லுங்கள். இந்த வளத்தை, நமது மண்ணை நம் மக்களுக்கு, பேரன் பேத்திகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். இப்பொழுது வலையபட்டி பக்கம் குவாரி போக்குவரத்து போக முடியாது. வலையபட்டி மக்களுக்கு உண்மையாகவே நன்றி சொல்கிறேன். வலையபட்டி மக்கள் அந்தப் பக்கத்தில் போக்குவரத்தை விடாமல் ஓரளவு தடுத்ததனால், இப்போது கோடாங்கிப்பட்டி மக்கள் அதை கண்டுக்கொள்ளவில்லை. விவசாயிகள் அந்த பக்கம் போக முடிகிறதா ? சுடுகாட்டிற்கு பிணங்களை கொண்டு போக முடிகிறதா? கொண்டு போவதற்குள் பத்து வண்டி, டிராக்டர்கள், லாரிகள்

வந்துவிடுகிறது. வேண்டாம், தயவு செய்து இந்த கோடாங்கிப்பட்டியில் நான் வாழ வேண்டும். என் பாட்டனும் பூட்டனும் சம்பாதித்தான் என்பதை விட. வேண்டாம் இந்த கல்குவாரி வேண்டாம். பட்டது போதும். இந்த கல்குவாரியின் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் உண்மையில் எல்லோரும் கலந்து கொண்டதற்கு நன்றி. இதை உண்மையிலே மறுபரிசீலனை செய்ய வேண்டும். எங்களுக்கு இந்த குவாரி வேண்டாம் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்" என்று தெரிவித்தார்.

5. திரு.சுப்புராஜ்:-

இவர் பேசுகையில், " இந்த முப்பது வருட காலமாக இந்த குவாரி ஓடிக்கொண்டிருக்கிறது எந்த ஒரு பாதிப்பும் பொது மக்களுக்கு இல்லை. இப்பொழுது திடீரென்று ஒரு நபர் சொல்கிறார் என்றால் அதை ஏற்க முடியாது. கல்குவாரி கண்டிப்பாக எங்கள் மக்களுக்கு தேவை. நாங்கள் இன்னொரு மாவட்டத்திற்கோ இன்னொரு தாலுகாவிற்கோ சென்று பொதுமக்கள் கல் எடுக்க முடியாது. இந்த கோரிக்கையை கண்டிப்பாக எங்களுக்கு நிறைவேற்றுமாறு ஐயாவிடம் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

6. திரு.பாலசுப்ரமணியன், கோடாங்கிபட்டி:-

இவர் பேசுகையில், "இந்த குவாரி வைப்பதா வேண்டாமா என்று கோரிக்கையை நாம் அனைவரும் நிராகரித்தால் எப்படி ? அதாவது ஒன்றுக்கு நான்கு குவாரி இருந்தால் தான் அவர்கள் விலையைக் குறைத்துக் கொடுப்பார்கள். ஒரு ஆள் மட்டும் வைத்திருந்தால் அவர்கள் வைத்தது தான் சட்டம். அப்படி இருக்கும்போது அரசு விதிமுறைப்படி உங்களுக்கு குவாரி ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தில் ஒரு சட்ட விதிமுறைகள் இருக்கிறது. அதன்படி சரியாக இருந்தால் அதை விடுங்கள் அதற்கு மாறாக இருந்தால் விட வேண்டாம். ஆனால் நிறைய குவாரிகள் இருந்தால் தான் நாம் ஒரு ஒப்பந்தம் எடுப்பதற்கோ, ஒரு வீடு கட்டுவதற்கோ, ஒரு 100 ரூபாய் 200 ரூபாய் ஒரு பொருளை குறைத்து வாங்க முடியும். விலையை குறைத்துக் கொடுங்கள் என்று கேளுங்கள். அண்டை மாநிலத்திற்கு போக வேண்டாம் என்று சொல்லுங்கள். விதிமுறையை பின்பற்றி இந்த குவாரியை நடத்தினால் பொதுமக்களுக்கும் நமக்கும் நன்மையாக இருக்கும் என்று சொல்லி என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

7. திரு.அன்புச் செல்வம், பண்ணைத்தோப்பு:-

இவர் பேசுகையில், "அதாவது முருகப்பா என்பவர், பெரிய கோடீஸ்வரர் வீட்டில் பிறந்தவர் கிடையாது. நம்மைப் போன்று சாதாரண ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து இந்த அளவு வந்திருக்கிறார் என்றால் எங்களுடைய ஒத்துழைப்பும் அவருடைய பெருந்தன்மையான குணமும் அவரிடம் இருக்கிறது. இதைப்போல இந்த கல்குவாரி ஒரு பெரிய முதலாளியிடம் சிக்கினால் எங்களை போன்ற அப்புராணிகள் கல் வாங்கி வீடு கட்டி வசதியாக வாழ முடியாது. இந்த லாரி போனதால் தூசியாகி என்று எத்தனை விபத்துகள் நடந்துள்ளது அதெல்லாம் கிடையாது. அவர்

பாட்டிக்கு பேசுகிறார்கள் தயவுசெய்து மாவட்ட கலெக்டர் இதை ஆராய்ந்துபார்த்து, இந்த கல்குவாரி அவரிடம் இருந்தால் நாங்கள் பொதுமக்கள் நல்லபடியாக வாழ்வோம்" என்று தெரிவித்தார்.

8. <u>திருமதி.பாண்டியம்மாள், பண்ணைதோப்பு :-</u>

இவர் பேசுகையில், "சூரியசெல்வம் அவர்கள் இருந்தால்தான் எங்களுக்கு நல்லது. நாங்கள் கோவில் கட்டிக்கொண்டு இருக்கிறோம். எங்களுக்கு மண், மணல் தருகிறார். எனக்கு கணவர் இல்லை, நாங்கள் வீடு கட்டும்போது எங்களுக்கு மண், கல் கேட்டவுடன் கொடுக்கிறார். எங்களுக்கு அவர் இருந்தால் நாங்கள் வீடுவாசல் கட்டி நன்றாக இருக்க முடியும். தயவு செய்து அவர் சூரிய செல்வத்திற்கு கொடுக்க வேண்டும்." என்று தெரிவித்தார்.

9. <u>திரு.அமுதகுமார் :-</u>

இவர் பேசுகையில், "இங்கு இருக்கக்கூடிய கல்குவாரி திட்டங்கள் வேண்டாம் என்று பேசுவதற்காக நான் வந்திருக்கின்றேன். தோராயமாக எதற்கு வேண்டாம் என்ற கேள்வி இருக்க வேண்டும். ஏன் என்ற கேள்வி இல்லை என்றால் வாழ்க்கை இல்லை. நமக்கு வருமானம் சம்பாதிப்பதற்கு பல வழிகள் இருக்கிறது. இன்று நான் சம்பாதிக்கும் காசு கிழிந்திருந்தால் கூட வேறு காசு அச்சு அடித்துக் கொள்ளலாம். இங்கு உள்ள மலைகளை நீங்கள் உடைத்து எடுத்து விட்டால் அது என்றைக்கு திரும்ப முளைக்கும் தெரியுமா? முளைக்கவே முளைக்காது. நமக்கு கைக்கு திரும்ப கிடைக்காத ஒரு பொருளை திரும்ப அழிப்பதற்கான உரிமையை யார் கொடுத்தார் என்ற கேள்வியை முன்வைக்க வேண்டியுள்ளது. நீர் ஆதாரம் பாதிக்கப்படும், நிலத்தடி நீர் குறையும், ஒரு வெடி வெடித்தால் எத்தனை டெசிபல் சத்தம் வரும் என்று இங்குள்ள யாருக்காவது தெரியுமா? அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சட்ட ரீதியான அனுமதிக்கப்பட்ட சத்தம் 50 டெசிபல். ஆனால் ஒரு வெடி வெடித்தால் அந்த சத்தத்தின் டெசிபல் 150db. இது மூன்று மடங்கு அதிகம். எவ்வளவு பெரிய பாதிப்பு என்று பாருங்கள். உங்களுக்கு காது போனால் வலிக்கும் எனக்கு காது போனால் வலிக்கும் காட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் மிருகத்திற்கு. அது மலைமாடில் இருந்து இறங்கி கீழே வந்துவிட்டால் என்னசெய்வது? அதனுடைய இடத்தை தொந்தரவு செய்தால் அது வராதா ? ஒரு வெடி வெடிக்கிறது என்றால் அதனுடைய அதிர்வு 600 மீட்டர் வரை போகும். அந்த அதிர்வு பூமிக்கு அடியில் போனால், எத்தனை பேர் உங்கள் வீட்டில் போர் போட்டு இருப்பீர்கள் இந்த அதிர்வில் போர் உடைந்தால் தண்ணீர் வராது.

நீங்கள் பாறையை பாறையாக தான் பார்க்கிறீர்கள். ஆனால் அந்த தண்ணீர் உங்களுக்கு குடிக்க வேண்டும் இல்லையா? தண்ணீர் இல்லையென்றால் இங்கே ஒரு மணி நேரம் நாம் தண்ணீர் குடிக்காமல் உட்கார்ந்துவிடலாமா? தண்ணீர் வேணும் இல்லையா ? அப்பொழுது அதனுடைய பாதிப்பு என்ன, விளைவு என்ன என்று பார்க்க வேண்டும். ஒரு மரத்தை வெட்டி விட்டோம்

நட்டுவிடலாம் அது முளைத்துவிடும். ஒரு வீட்டை இடித்துவிட்டால் திருப்பி கட்டிக் கொள்ளலாம். ஆனால் பாறை? வருமானத்திற்கு விவசாயம் இருக்கிறது, தொழில் இருக்கிறது, படிப்பு இருக்கிறது. இன்றைக்கு மேலை நாடுகளில் பார்த்தால் வீணாய்ப் போகிற பிளாஸ்டிக்கை பயன்படுத்தி சாலை போடுகிறார்கள், திட்டங்கள் நிறைய வந்துள்ளது. AIC Blocks என்று மெட்டீரியல்ஸ் நிறைய வந்துள்ளது. புதிய தொழில்நுட்பங்கள் நிறைய வந்திருக்கிறது. நடந்து போன நாம் புதுப்புது தொழில்நுட்பம் பயன்படுத்த ஆரம்பிக்கும் பொழுது ஏன் இந்த இயற்கை வளத்திற்கு மட்டும் நாம் அந்த மலையை நொறுக்க வேண்டும் என்று கேட்க வேண்டி இருக்கின்றது ? இந்த கட்டிடத்தில் பாருங்கள் கூரையை எதனால் செய்திருக்கிறார்கள்? நீங்களே பாருங்கள் என்ன மாதிரி ஒரு மெட்டீரியல் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று. இதற்கு கல் மண் பங்கேற்பு எவ்வளவு ? இது PUC மெட்டீரியலில் போட்டு இருக்கிறார்கள். Sound absorption. இந்த கல்லை தோண்டி நம்முடைய தேவைக்கு மட்டும்தான் பயன்படுத்துகிறோமா ? இந்த ரோட்டில் நடந்து போனால் எதிரில் வரும் குவாரி வண்டியின் வேகத்தை பார்த்தால் உங்கள் மனசு துடிக்குதா இல்லையா ? இந்த வண்டி இவ்வளவு வேகமாக போகிறது என்று. அந்த வண்டி திரும்புகிற இடத்தை பார்த்திருக்கிறீர்களா ? உங்களை இடித்து தட்டி தூக்குமா? தூக்காதா? இந்த கொட்டக்குடி ஆற்றில் தண்ணீர் ஒழுங்காக ஓடுகிறதா இல்லையா ? அந்த ஆற்றை மறித்து ஒரு பாலம் கட்டி அதில் எல்லா கான்கிரீட்டியும் கொண்டுபோய் அதில் கொட்டினால் அது கொட்டும் இடமா? நம் உடம்பில் ஒரு நரம்பு அடைத்து விட்டால் பைபாஸ் சர்ஜரி பண்ணுகிறார்கள், ஸ்டண்ட் வைக்கிறார்கள், ஓபன் ஹார்ட் சர்ஜரி செய்கிறார்கள். இந்த ஆற்று தண்ணீரை எல்லாம் இப்படி அடைத்துவைப்பதற்கு காரணம் அங்கு வெடிக்கிற வெடி இங்கு அதிர்கிறது.

இந்த மேசையில் அந்த மூளையில் அடித்தால் இந்த பாட்டில் நகருமா? நகராதா? பூமிக்குக் கீழே நீரோடை இருக்கிறது. நீரோடையை ஒட்டி 500 முதல் 600 மீட்டரில் வீடுகள் இருக்கின்றது. அதை மீறி நோய்களை பார்க்க வேண்டி இருக்கின்றது.Asbestosis என்ற நோய் வரும். ஒரு பாறையை உடைத்தால் அதிலிருந்து வரும் விஷவாயு என்ன என்று நமக்கே தெரியாது. அந்த விஷவாயு அங்கு மட்டும்தான் பறக்குமா ? அந்த விஷவாயு எத்தனை கிலோமீட்டர் அப்பால் செல்லும் என்று தெரியுமா ? அந்த காற்றை தடுக்க முடியுமா ? அதை சுவாசிக்கின்ற குழந்தையை தடுக்க முடியுமா ? உங்கள் வீட்டு எங்கள் வீட்டு பிள்ளைகளுக்கு மூச்சுப் பிரச்சனை வந்தால் சந்தோஷமா ? எல்லா குவாரியையும் நிறுத்துங்கள் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஐயா உங்கள் கருத்தை நீங்கள் சொல்லுங்கள், நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் உங்களுக்கு வருகின்ற உடல்நிலை பிரச்சனைக்கான முழு காரணம் இதுதான். மூச்சு பிரச்சினை வரும் இது எல்லாத்தையும் பார்க்க வேண்டி இருக்கும். உடல்நிலை பாதிப்பு வரும்.எல்லாருக்கும் இங்கு கருத்து இருக்கிறது" என்று தெரிவித்தார்.

6. திரு.ராஜ்குமார், பண்ணைத்தோப்பு:-

இவர் பேசுகையில், " இதற்கு முன்னால் பேசிய ஐயா கூறினார் வெடி வெடித்தால் அதிரும் என்று சொன்னார் சரிதான். ஒரு பத்து ஏக்கர் தென்னந்தோப்பு என்றால் ஒரு பத்து அடி கிணறு தோண்டினால் மட்டும்தான் நமக்கு தண்ணீர் கிடைக்கும். அதற்காக கிணறு தோண்டாமல் தண்ணீர் வரணும் என்றால் எப்படி? தண்ணீர் நமக்கு மேலோட்டமாக ரோட்டில் வராது. அவர் பேசினது சரிதான், நமக்கு என்ன தேவை, அரசு எதுக்கு அந்த இடத்தை ஒதுக்கி கொடுத்துள்ளது? 1.69 ஹெக்டேர் புறம்போக்கு நிலம் ஒதுக்கி கொடுத்திருக்கிறார்கள். புறம்போக்கு நிலம். அதிலிருந்து கல்லை எடுத்துக் கொள்ளலாம் என்றுதான் குத்தகை விட்டு இருக்கிறது. ஏன் அரசு குத்தகை விடக்கூடாதா? இமயமலையை போய் உடைக்கிறோமா ? மேற்கு தொடர்ச்சி மலையை போய் உடைக்கிறோமா ? அரசு பொது இடத்தை நமக்கு கொடுத்துள்ளது. அந்த இடத்தை முறையாக குத்தகை எடுத்தால் எல்லோருக்கும் தேவைப்படும். எனக்கு கல் மண்வேண்டும் என்றால் நான் போய் ஹைதராபாத்தில் எடுக்க முடியாது, சென்னையிலிருந்து கொண்டுவர முடியாது. என் இடம். தனி இடம் ஒதுக்கி அதைக் குவாரிக்காரர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். நான் கல் மண்அங்கிருந்து வாங்க போகிறேன் இதில் யாருக்கு என்ன எதிர்ப்பு என்றால் அது அவர்களுடைய கருத்து. அதாவது மழை பொழியாமல் சஹாரா பாலைவனத்தில் போய் தண்ணீர் வேண்டும் என்றால் வராது. எனக்கு ஒதுக்கி கொடுத்து உள்ள இடத்தில் குவாரி விட்டு இருக்கிறார்கள். எனக்கு தேவையான அளவு கல், மண் அவரிடம் கேட்டு எடுக்கின்றோம். அவர் பேசினார் காற்று மாசுபடும் என்று, கல்குவாரி வைத்து உடைத்தால் மட்டும் மாசுபடாது. நூறு வண்டி தினமும் போய் வருகின்றது. எவ்வளவோ புகை போய் வருகின்றது. நமது வீட்டில் ஒரு பிளாஸ்டிக் பை எரிக்கின்றோம் அதிலிருந்து புகை வருகிறது. அதாவது நமக்கு கட்டுப்பாடு வேண்டுமென்றால் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் அவர் எனக்கு தேவையான அனைத்துமே கொடுக்கிறார். அவர் எனக்கு தெரிந்தவரும் கிடையாது தெரியாதவரும் கிடையாது. எனக்கு என்ன தேவையோ அதை நான் கேட்கிறேன். எனக்கு பக்கத்தில் குவாரி இருப்பதால் ஏனக்கு எனது குடும்பம், சுற்றுவட்டாரத்திற்கும் நல்லது. அவர் குவாரி எடுத்ததனால் யாருக்காவது எதும் கிடைக்காமல் போய் இருக்கிறதா என்று சொல்லுங்கள். எல்லாருக்கும் நன்மை தான் கிடைத்துள்ளது. பத்து பேர் கோடாங்கிப்பட்டி, தோப்புப்பட்டி, பண்ணைத்தோப்பு, சாலி மரத்துப்பட்டி, மீனாட்சிபுரம், சுத்துப்பட்டில் எனக்கு தெரிந்து தினமும் 100 பேர் தினமும் வேலைக்கு போய்க்கொண்டுதான் வருகிறார்கள். அவர்கள் வாழ்வாதாரம் அந்த கல் குவாரியில் இருந்து தான் கிடைக்கிறது. கல்குவாரி வேண்டாம். எனக்கு ஆற்று தண்ணீர் வேண்டாம் என்றால் இதற்கு ஒன்றும் செய்ய முடியாது. அரசு ஒதுக்கி கொடுத்து இருக்கார்கள். வேண்டும் என்பவர்கள் தெரிவியுங்கள். வேண்டாம் என்பவர்கள் அவர்களது கருத்தைப் பதிவு செய்யுங்கள் " என்று தெரிவித்தார்.

11. <u>திரு.கோபிகிருஷ்ணன்,தோப்புப்பட்டி:-</u>

இவர் பேசுகையில், "அதாவது, இந்த கல்குவாரி வந்ததனால் மக்கள் எல்லாரும் பயன் அடைந்து வருகின்றனர். அவர் சொன்னார் கல்குவாரி வைத்தால் தான் பிழைக்க முடியுமா, விவசாயம் செய்யலாம், படிக்கலாம்' என்று எல்லாமே சொன்னார். இன்றைக்கு விவசாயம் நிரந்தரமில்லை; படித்த படிப்புக்கு வேலை இல்லை. ஆனால் இந்த குவாரியில் எண்ணற்ற இளைஞர்கள், பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கின்றது. இது எங்களுக்கு உண்மையிலேயே பயனுள்ளதாக உள்ளது. அவர் சொன்னார், இந்த கல்குவாரி வண்டிகூட வேகமாக போகிறது. திடீரென்று திருப்புகிறார்கள். நீங்களும் நானும் வந்தால் உயிர் தப்ப முடியுமா' என்று கேட்கிறார். ஆனால் இதே ஒரு தனியார் பேருந்து, அரசு பஸ் கூட வேகமாகத் தான் போகிறது. நீங்கள் அவர்களிடம்போய் வேகமாக போகாதீர்கள் என்று சொல்ல முடியுமா? அவர்கள்' டைமிங் எடுக்க வேண்டும்' என்பார்கள். அதனால் குவாரி வந்ததால் தான் வண்டிகள் வேகமாகப் போகின்றன என்பது உண்மை இல்லை. பொதுவாகவே எல்லா பேருந்துகளும் இந்த பகுதியில் வேகமாகதான் செல்கிறது. இரண்டாவது, எங்கள் ஊரிலிருந்து ஒரு 2.5 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் தான் குவாரி இருக்கிறது. இதனால் எங்கள் ஊருக்கோ, அருகிலுள்ள எந்த ஒரு கிராமத்திற்கும் பாதிப்புகள் இல்லை. பாதிப்பு வரும் என்றால் பக்கத்தில் இருக்கும் கிராமங்கள் பாதிப்புக்கும் என்றால் அரசு இந்த குத்தகை தரவே மாட்டார்கள். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, எல்லாமே ஆராய்ச்சி செய்து தான் நல்ல முறையில் கொடுப்பார்கள். இந்த குவாரி வருவதால் எங்களுக்கு எதுவும் இல்லை. அவர் எங்களுக்கு என்று இல்லை. இந்த பகுதியில் உள்ள ஊர்களுக்கு உதவி கேட்கும்போது அவர் எப்போதும் உதவி செய்து வருகிறார் கோவில் கட்டுவதோ, ஊருக்கு பாதை போடுவதோ, எல்லாவற்றிலும் நல்லமுறையில் செய்து வருகிறார். தவறு சொல்வதற்கு ஒன்றுமே இல்லை. இடையில் ரயில்பாதை இருக்கிறது, அதற்கும் அந்த பக்கம் 2 கிலோமீட்டர் தள்ளிதான் குவாரி உள்ளது. இந்த குவாரி வருவதால் எங்களுக்கு பாதிப்பு ஏதும் இல்லை; எண்ணற்ற இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கிறது. டிரைவராகவோ, வேறு எந்த வேலைக்குச் சென்றாலும் வேலை கிடைக்கிறது. அதனால் இது எங்களுக்கு பயனுள்ளதாக உள்ளது" என்று தெரிவித்தார்.

12. <u>திரு.ராஜசேகர், கோடாங்கிபட்டி :-</u>

இவர் பேசுகையில், "இந்த குவாரி திறப்பது எங்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி. இதனால் எம்-சாண்ட், பி-சாண்ட், ஜல்லி எல்லாம் விலை குறைவாக கிடைக்கிறது. பக்கத்திலுள்ள கோடாங்கிப்பட்டி, தோப்புப்பட்டி, வலையாத்துப்பட்டி, பூதிப்புரம், பண்ணைத்தோப்பு, சாளிமரத்துப்பட்டி போன்ற இடங்களில் இருக்கும் ஏழை, எளிய மக்களுக்கு மிகவும் குறைந்த விலையில் மணல் கிடைக்கிறது.

இது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இது எல்லாமே பக்கத்திலேயே கிடைக்கிறது. இல்லையென்றால் வெளியூர் சென்று எடுத்து வரவேண்டியிருக்கும், அது எங்களுக்கு மிகுந்த சிரமமாக இருக்கும். இப்போது ஏழை, எளிய மக்களுக்கு பக்கத்திலேயே கிடைப்பதால் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது" என்று தெரிவித்தார்.

13. <u>பிச்சைமணி, தோப்புப்பட்டி:-</u>

இவர் பேசுகையில், "இந்த குவாரி குத்தகை எடுக்கப்பட்டிருப்பது எங்களுக்கு அனைவருக்கும் மகிழ்ச்சி. பல மக்கள் வெளியூரில் டிரைவராக இருக்கிறார்கள். அவர்கள் குடும்பக் கஷ்டத்திற்காக வேலைக்கு வந்து இருக்கிறார்கள். இதை இப்படி மறுத்துவிட்டால், அவர்கள் வேலைக்காக எங்கு செல்வார்கள்? என்ன செய்வார்கள்? ஒவ்வொருவரின் குடும்பத்திலும் ஆயிரம் பிரச்சனைகள் இருக்கும்; அந்த ஆயிரம் பிரச்சனைகளுக்கு வேலை செய்தால் தான் குடும்பத்தை பிள்ளைகளை பார்க்க முடியும். படிக்க வைக்க முடியும். இந்த குவாரி இருப்பதால் எங்களுக்கோ, எங்கள் ஊருக்கோ பிரச்சனை எதுவும் இல்லை. இன்று ஒரு கோவில் கட்ட வேண்டும் என்று கேட்டால், சின்ன பிள்ளையை போனால்கூட மணல், கல், ஜல்லி எல்லாம் வந்துவிடும். தண்ணீருக்கும், மணலுக்கும், கல்லுக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது. ஆற்றில் ஆயிரக்கணக்கான பிரச்சனைகள் ஓடுகிறது. ஆற்றுப் பிரச்சனையை மாவட்ட ஆட்சியரிடம் போய் சொல்லுங்கள் என்கிறார்கள். ஆற்றில் ஏற்பட்டுள்ள உண்மையான பிரச்சனைகளை யாராவது பேசுகிறார்களா? மக்கள் குப்பையை கொண்டுவந்து கொட்டுகிறார்கள். சிறுநீர் கழிக்கின்றனர். மக்கள் குடிக்க முடியவில்லை. 20-30 வருடங்களுக்கு முன்பு ஆற்றுத் தண்ணீரில் மக்கள் சோறாக்கி சாப்பிட்டோம். இன்று சாப்பிட முடிகிறதா? இதுக்கு முன்னர் பேசியவர் சொன்னார், தண்ணீர் இல்லையென்று. அவர் அதை சுத்தப்படுத்த முடியுமா என்று கேளுங்கள். என்னுடைய சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அவர் குத்தகை எடுப்பதில் எந்தத் தவறும் இல்லை. எங்களுக்கு கோவில் கட்டவோ,, வீடுகட்டவோ, கல், மண், வேண்டுமென்றால் ஒருபோன் செய்தால் உடனே வந்துவிடும். எங்களுக்கெல்லாம் நல்லதே நடக்கிறது" என்று தெரிவித்தார்.

14. <u>திருராமு, கோடாங்கிபட்டி:-</u>

இவர் பேசுகையில், "இங்கே கல்குவாரி திறப்பதற்கு நிறைய பேர் தடையாக இருக்கிறார்கள். ஆனால் தடைக்கு ஏதும் வேலை கிடையாது. இப்போது கல், மணல் இல்லையென்றால் ஒரு வீட்டையும் கட்ட முடியாது. ஆற்றில் மணல் எடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அதே மாதிரி கல்குவாரி இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டால் யாரும் வீடுகட்ட முடியாது. நான் முன்பு மண்சுவர், தகரசீட் வீட்டில் எப்போது இடிந்து விழும் என்ற பயத்தில் பிள்ளைகளை வைத்துக் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டேன். கல்குவாரியில் மண் எடுக்கலாம் என்று அரசு ஆரம்பத்தில்

உத்தரவு போட்டதால் தமிழ்நாடு முழுவதும் கல்குவாரி ஆரம்பித்தார்கள். அதனால் தான் எல்லா கல்குவாரியும் இயங்கிக் கொண்டு இருக்கிறது. அதிகமாக இயங்குகிறது, குறைவாக இயங்குகிறது என்பது மக்கள்தொகை அதிகரித்ததால், அனைவருக்கும் எம்-சாண்ட், கல், மணல் ஆகியவை மிகவும் தேவைப்படுகிறது. ஒரு கல்குவாரி இருந்ததால்தான் நல்ல நிரந்தரமாக, நிம்மதியாக தூங்கக்கூடிய வீடு கல், மணல், எம்.சாண்ட் பயன்படுத்தி கட்ட முடியும். இன்று தார்சாலைபோட கோவில் கட்ட என எல்லாவற்றிற்குமே மக்களுக்கு எம்-சாண்ட், ஜல்லி தேவைப்படுகிறது. ஏழை மக்களுக்கு 500, 1000 ரூபாய் குறைத்து கொடுங்கள்' என்று கேட்டால், எத்தனை கல்குவாரிகள் மக்களுக்கு உதவிசெய்து வருகிறார்கள். குவாரி இல்லையென்றால் யாரும் வீடுகட்ட முடியாது. தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இரண்டு மாடி, மூன்று மாடி வீடுகளில் மக்கள் வசிக்கிறார்கள். அதற்கு காரணம் என்ன? திருச்சியில் மண் எடுக்கக்கூடாது, புதுக்கோட்டையில் மண் எடுக்கக்கூடாது, கரூரில் மண் எடுக்கக்கூடாது அங்கெல்லாம்' மண் எடுத்தால் தண்ணீர் பாதிக்கும்' என்று சொல்கிறார்கள் ,கல்குவாரியும் எடுக்கக்கூடாது என்றால், மக்கள் எதை வைத்து வீடுகட்டுவார்கள்? எம்-சாண்ட், ஜல்லி மக்களுக்கு கண்டிப்பாக தேவை. அதனால், இந்த குவாரி திறப்பதால் எங்களுக்கு எந்தவொரு விபத்தும், ஆபத்தும் இல்லை. எங்கள் ஊருக்கோ, வீடுகளுக்கோ, விவசாய நிலங்களுக்கோ எந்தப் பாதிப்பும் இல்லை. ஊருக்கு ஒதுக்குபுறமான பாதிப்பு இல்லாத இடத்தை தான் அரசு ஒதுக்கி கொடுக்கிறது. அவர்கள் குவாரி திறந்து கல் எடுப்பதற்கு எங்கள் பக்கம் எந்தத் தடையும் விதிக்கவில்லை. எங்களுக்கு எந்த பிரச்சனையையும் ஏற்படுத்தவில்லை. தைரியமாக அனுமதி வழங்கலாம்" என்று தெரிவித்தார்.

15. <u>திரு.பெருமாள் :-</u>

இவர் பேசுகையில்,"ஆற்றில் மண் அள்ளக் கூடாது என்று அரசு சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தது அதை ஏற்றுக் கொண்டு தான் இந்த கல்குவாரி இயங்கி வந்தது. அரசு நிர்ணயித்த விலையைவிட முருகப்பா அவர்கள் 1000 500 குறைத்து கொடுப்பதால் கிராமத்தில் கூரை வீட்டில் இருக்கும் . ஏழை விவசாயக் குடும்பங்கள் எல்லாருக்கும் பயனுள்ளதாக உள்ளது. கோவில், குளத்திற்கும் இலவசமாக கல் கொடுக்கிறார். இங்கு மற்ற ராஜாஜி குவாரி, சபரீசன் குவாரிகள் இருக்கிறது. அங்கெல்லாம் போகாமல் ஏழை விவசாய மக்கள் இங்கு வருவதற்கு காரணம் அங்கு தரமற்ற மெட்டீரியல் உருவாக்குகிறார்கள். அந்த கட்டிடம் நன்றாக தாங்கி நிற்க வேண்டும் என்பதற்காக ஏழை விவசாயிகள், சிறுதொழில் செய்பவர்கள் டிராக்டர்களில் அதிகம் எடுத்துச் செல்கின்றனர். இதனால் இந்த கொட்டக்குடி ஆற்றில் மணல் அள்ளுவது தடுக்கப்படுகிறது. முன்பு கான்ட்ராக்டர், கட்சிக்காரர்கள், டிப்பர் லாரி வைத்திருப்பவர்கள் ஆற்றில் இருந்து மணலை எடுத்து வந்தார்கள். அவர்களை கட்டுப்படுத்துவதற்கே இந்த மணல்குவாரிக்கு அனுமதி

கொடுக்கிறார்கள். வெடி வைக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு ஒரு 500 மீட்டர் தூரத்திற்கு எச்சரிக்கையாக ஆள் பாதுகாப்புடன் சம்மந்தப்பட்டவர்கள் வெடி வைக்கிறார்கள். பத்து நிமிடத்திற்கு மட்டுமே அந்த அதிர்வு இருக்கும்; அதுவும் பாதுகாப்பு விதிமுறைகளுக்குள் நடைபெறுகிறது. அரசாங்கம் அனைத்து பாதுகாப்பு சோதனைகளையும் உறுதி செய்த பின்னரே இந்த குவாரிக்கு அனுமதி வழங்கியுள்ளது. ஒரு 15% எதிர்ப்பு தெரிவிக்கலாம். ஆனால் 85% மக்கள், இந்த போடி மாவட்டம், அம்மாப்பட்டி சுற்றுப்புற பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் பாதிக்காமல் இருக்கும். எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் உதவி செய்கிறார்கள். படிப்பு செலவாக இருந்தாலும் கூட ஆதரவு தருகிறார்கள். ஒரு அரசியல்வாதியோ, கட்சிக்காரர்களோ யாரும் வீட்டிற்கு வந்து உதவி செய்ய மாட்டார்கள். ஆள் இல்லை என்றால் ஒரே ஒரு போன் செய்தால் போதும். அவர்கள் வீட்டிற்கு கல், ஜல்லி, மணல் வந்து சேரும். 100% இந்த கல்குவாரி வரவேண்டும் என்று தான் ஏழை மக்கள் வேண்டுகிறோம். எங்கள் ஊர் சார்பாக 100% இந்த கல்குவாரி வரவேண்டும் என்று ஏழைமக்கள் கேட்டுக்கொள்கிறோம். சிலர் இதை தடுக்க முயற்சித்தாலும், இறுதியாக அரசு தான் உண்மை நிலையைப் பார்த்து சரியான முடிவு எடுக்க வேண்டும்." என்று தெரிவித்தார்.

16. <u>திருமதி.ஜெயா, கோடாங்கிபட்டி</u>:-

இவர் பேசுகையில், " கல்குவாரி வந்ததால் எங்களுக்கு இந்த சுற்று வட்டாரத்தில் எந்த கெடுதலும் இல்லை. தேனி மாவட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கு இந்த ஜல்லி, மணல் தேவைப்படுகிறது. 20 ஆண்டுகளாக ஆற்று மணல் எடுப்பதே இல்லை. ஆற்றுக்கும், கல்குவாரிக்கும் எந்த தொடர்பும் இல்லை. எல்லோருக்கும் இந்த மண்தான் உதவியாக உள்ளது. இந்த சுற்றுவட்டாரத்தை முழுமையாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமானால் இந்த மண்தான் தேவையாகிறது. எனவே இதனால் எங்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை" என்று தெரிவித்தார்.

17. <u>திருமதி.சௌந்தரி</u>:-

இவர் பேசுகையில், "இந்த குவாரியால் எங்கள் ஊருக்கு எந்த கெடுதலும் இல்லை. இந்த குவாரியை, ஒரு பிரச்சினையாக சொல்கிறீர்கள், இந்த ஆற்றை சொல்கிறீர்களா? ஆற்றுக்கு நடுவில் தென்னங்கன்று வைத்திருக்கிறார்கள். இதை யாராவது பேசுகிறீர்களா? நாங்கள் ஆற்றில் 100 நாள் வேலை செய்யும்போது பார்க்கின்றோம். அதை ஒருவர்கூட சொல்ல மாட்டார்கள். குவாரிக்கும் இதற்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? ஆற்றில் மணல் எடுத்து அதை குறுக்கி வாய்க்கால் போல ஆற்றை வைத்திருக்கின்றோம். அதை விட்டுவிட்டு குவாரி என்று கூறினால் குவாரியை எப்படி குற்றம் கூறலாம்? ஏன் குவாரியின் வளர்ச்சி பிடிக்காமல் கெடுதல் செய்கிறீர்களா ? ஏன் இதற்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள் ? இது இருப்பதால் தான் எங்களுக்கு மண் கிடைத்தது ஜல்லி கிடைக்கிறது. ஆற்றில் ஒரு துளி மண்கூட கிடையாது. நாங்கள் எப்படி வீடு கட்டுவோம் ?

ஆற்றுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. முதலில் ஆற்றை அகலப்படுத்துங்கள். குவாரிக்கும் ஆற்றிற்கும்சம்பந்தமே இல்லை" என்று தெரிவித்தார்.

18. <u>திருமதி.உமா, துரைராஜபுரம்</u>:-

இவர் பேசுகையில்,"இந்த குவாரி இருப்பதால் யாருக்கும் எந்தக் கெடுதலும் இல்லை. மனிதனுக்கான அடிப்படைத் தேவைகள் நீர், நிலம், காற்று. நீர்நிலையில் மணல் அள்ளி ஆற்றை யாரும் கெடுக்கவில்லை. நமக்கு தேவை நிலம். விலங்குகள் தான் காட்டில் குடியிருக்கும். நாம் விலங்குகள் அல்ல, மனிதர்கள். நமக்கென்று ஒரு வீடு தேவை. அதற்கு கல், மணல் வேண்டும் கல்குவாரி தேவைப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள எல்லா குவாரிகளையும் போய் அடைக்க முடியுமா? முடியாது. இது அரசு உத்தரவு பெற்று, கலெக்டர் மூலமாக இந்த குவாரி இயங்குகிறது. இதுக்கு முன் பேசியவர்களின் ஆற்றாமை இது எல்லாமே. பொதுமக்கள் வீடுகட்டுவதற்கு தனித்தனியாக லாரி வாடகைக்கு எடுத்து மணல் வாங்குவதற்கு வசதியில்லை. அதிக செலவாகிறது. ஆனால் இங்கு இந்த குவாரி இருப்பதால் பொதுமக்கள் எல்லாருக்கும் நிறைய உதவி கிடைக்கிறது. படித்த இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கிறது. நான் ஒரு வீடு கட்ட வேண்டும் என நினைத்தால் குறைந்த விலையில் பொருட்களை வாங்க இந்த குவாரியில் இருந்து தான் வாங்க முடியும். வெளியிலிருந்து வாங்க முடியாது. அனைவரும் இதைப் புரிந்து கொண்டு இந்த குவாரிக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

19. <u>திரு.அடைக்கலம், பத்ரகாளிபுரம்</u>:-

இவர் பேசுகையில், "இங்கு பேசுகிற சிலர் கல்குவாரி வேண்டும் என்று சொல்கிறார்கள்: சிலர் வேண்டாம் என்று சொல்கிறார்கள். இதில் "வேண்டும்" என்று சொல்கிறவர்களுக்கும் "வேண்டாம்" என்று சொல்கிறவர்களுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. உரிமைக்காக பேசுகிற ஒருசிலர் மத்தியில், நிறைய பேர் ஊதியத்திற்காக பேசிக்கொண்டு இருக்கிறீர்கள். ஊதியம் வாங்கி பேசுபவர்களுக்கு எங்களின் வலி புரியாது. இந்த மலைகளின் வலி புரியாது. மக்களின் வாழ்க்கை புரியாது. நீங்கள் இந்த ஒருநாள் 500 ரூபாய் வாங்கி பிழைத்தால் போதும் என்று நினைக்கிறீர்கள்.

யாராவது சொல்லுங்கள் பார்ப்போம் உரிமையில் வந்திருக்கிறேன் என்று. எல்லாரும் வெளியில் இருக்கும் பேருந்தில் ஏறி, ஆளுக்கு 1000, 500 ரூபாய் வாங்கிக் கொண்டு கொண்டு வந்திருக்கிறீர்கள். இதற்கு பெயர் கருத்துக் கேட்பு கூட்டமா இது? இங்கு பேசுகிறவர்கள், "இந்த மலையில் இருக்கும் கல், மணலை வைத்து தான் வீடு கட்டுகிறோம், எங்களது வாழ்வாதாரம் இருக்கிறது என்றும், இந்த குவாரி இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்று சொல்கிறீர்கள். நீங்கள் சொல்லுங்கள், இங்கிருந்து எடுக்கப்படும் கல், மணல் நமது தேனி மாவட்டத்துக்கோ, தமிழ்நாட்டு தேவைக்கு பயன்படுகிறது என்று, ஒரு நாளைக்கு சராசரியாக கம்பம்மெட்டு வழியாக 200 டிப்பர் லாரிகள் கேரளாவுக்கு செல்கின்றன. போடிமெட்டு வழியாக மேலும் 200 டிப்பர் லாரிகள்

கேரளா செல்கின்றன. இங்கு இருக்கக்கூடிய ஆட்சியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இது தெரியாதா? இங்கு இருக்கக்கூடிய வலையபட்டி, கோடாங்கிப்பட்டி மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஏராளமான கல்குவாரிகள் ஏற்கனவே உள்ளன. இங்கு இருக்கக்கூடிய எம்.சாண்ட், கல் வைத்து வீடு கட்டுகிறோம் என்று சொல்கிறீர்கள்.

இப்பகுதியில் தேவைக்கு அதிகமாகவே கல்குவாரிகள் இருக்கிறது என்பதை நான் போன வருடம் அரசிடம் இருந்து பெற்ற முதல் தகவல் அறிக்கை என்னிடம் இருக்கிறது. அதில் இப்பகுதியில் கிட்டத்தட்ட 37 கல்குவாரிகள் அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது. அப்படி இருக்கும்போது எதற்கு இன்னொரு கல்குவாரியை நீங்கள் தேர்ந்தெடுக்கிறீர்கள்? இந்த வலையபட்டியைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதி முழுக்க, முழுக்க விவசாயப் பகுதி என்பது உங்களுக்கு தெரியாதா? முதலில் கருத்துக் கேட்புக் கூட்டம் வைத்ததே தவறு. இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தை முதலிலேயே நிராகரித்திருக்க வேண்டும். ஏனென்றால் வலையபட்டி, கோடாங்கிபட்டி, பண்ணைத்தோப்பு முழுவதுமே விவசாயப் பகுதி. இங்கு இருக்கக்கூடிய மக்கள் ஆடு-மாடு, விவசாயத்தை நம்பி பிழைப்பவர்கள். இந்தக் கல்குவாரியில் இருந்து எழும் மண், தூசி எல்லாம் தாவர இலைகளில் படிந்து ஒரு மாடு கூட வளர்க்க முடியாத சூழலில் இருக்கிறது. நான் மாட்டுத்தீவனம் விற்பவன். அந்த வலியில் பேசுகிறேன். இருக்கக்கூடிய அத்தனை இலை, தழைகள், காய்கறிகளில் மண் படிந்துள்ளது. இதனால் ஒருநாளும் இந்த கல்குவாரியை அனுமதிக்கக் கூடாது.

சிலர் சொல்கிறார்கள் "இந்தக் குவாரி இருப்பதால் தான் எங்களுக்கு வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் என்று. இல்லையெனில் பிச்சை தான் எடுக்க வேண்டும்" என்று. 10-20 ஆண்டுகளுக்கு முன்பு இந்தக் குவாரிகள் இல்லாமல் இருந்த காலத்தில் மக்கள் யாரும் பிழைக்கவில்லையா? யாரும் மூன்று வேளை சாப்பிடவில்லையா? எல்லோரும் பட்டினியில் செத்து விட்டோமா? இந்தக் கல்குவாரியை கண்டிப்பாக தடை செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். தடை செய்யாமல், அனுமதி கொடுக்கப்போகிறோம், குவாரி நடத்துவோம் என்ற சூழல் வந்தால் மக்களைத் திரட்டி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மிகப்பெரிய போராட்டம் நடத்தி போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்வோம். இதை எச்சரிக்கையாகச் சொல்கிறேன். இந்தக் கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது" என்று தெரிவித்தார்.

20. திரு.முருகப்பா, கோடாங்கிபட்டி:-

இவர் பேசுகையில், "அவர்கள் தங்கள் கருத்துகளை அரசிடம் தெரிவிப்பதில் எந்தத் தவறும் இல்லை; அவர்களும் தங்கள் கருத்தை சொல்லட்டும், பொதுமக்களும் உங்கள் கருத்தை சொல்லுங்கள். இதற்கு இடையில் வன்முறை எதற்கு வரவேண்டும்? நல்லதா கெட்டதா, யார் எப்படி

பேசுகிறார்கள், எந்தப் பிரச்சனைக்காக பேசுகிறார்கள் என்பதையும் அதிகாரிகளுக்கு தெரியுட அவர்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். உங்களுக்கு எல்லாருக்கும் சம்மதம் தானே? சம்மதம் இருந்தால் கை தூக்குங்கள்; அதிகாரிகள் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் அவ்வளவு தான். பெரும்பான்மை இருந்தால் யாராலும் அதை மாற்ற முடியாது. நூறுபேர் கூடிப் பேசட்டும், யார் என்ன வேண்டுமானாலும் கூறட்டும். நாங்கள் தொழில் செய்வது பொதுமக்களுக்கும், கோவிலுக்கும், படிப்புச் செலவுகளுக்கும் எல்லாருக்கும் தான்.

500 ரூபாய் கொடுத்து மக்களைக் கூட்டவில்லை. அன்பால் கூட்டிருக்கிறோம். எங்கு வேண்டுமானால் எங்களைப்பற்றி கேட்டுக்கொள்ளுங்கள். நாங்கள் சம்பாதிக்கிறோம் இல்லை என்று சொல்லவில்லை, அதே நேரத்தில் மக்களுக்காகவும் செய்கிறோம். தீர்த்ததொட்டி முருகன் கோவிலுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு நான் வேலை செய்து கொண்டிருக்கிறேன்; இதை யாருக்காக செய்கிறேன்? மக்களுக்காகத்தான். அந்த கோவிலில் எல்லோரும் உட்கார்ந்து பக்தர்கள் எல்லாம் சாப்பிட வேண்டும் என்று அந்த முருகப் பெருமானுக்காக செய்து கொண்டிருக்கிறேன். செய்யாத ஊர் கிடையாது. நாங்கள் தொழில் செய்து நற்பணி செய்கிறோம்; 500, 1000 ரூபாய் கொடுத்து கூட்டம் கூட்டவில்லை. வேண்டுமானால் நான் இதை விட்டுவிட்டு ரோட்டில் நிற்கின்றேன். என் பின்னால் ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பார்கள். அந்த அளவுக்கு நாங்கள் மக்களோடு பழகி வருகிறோம். இந்த தொழில் நடைபெறுவதால் ஏழை எளிய மக்களுக்கு நல்ல முறையில் மணல், ஜல்லி, எம்-சாண்ட் கிடைக்கிறது.

நாங்கள் இல்லையென்றால் நீங்கள் ரோட்டில் போக முடியுமா? இங்கிருந்து மதுரைக்கு ஒரு மணி நேரத்தில் எப்படி போகிறீர்கள்? பாலத்தை எப்படி கடக்க முடியும்? எங்களை மாதிரி தொழில் செய்தால்தான் பாலம், மாடிவீடு, கிராம சாலை, தார்சாலை எல்லாம் போட முடியும். இத்தனை நன்மைகளை விட்டுவிட்டு, யாரோ சொல்கிறார்கள் என்பதற்காக இப்படிப் பேசுவது நியாயமல்ல. எனவே உங்களுடைய கருத்துகளை எல்லாரும் கூறுங்கள்; எந்தத் தவறும் இல்லை. யார் என்ன சொல்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதை அரசு நன்றாகவே அறியும்" என்று தெரிவித்தார்.

21. திரு.பிரேம்சந்தர், நாம் தமிழர் கட்சி, மண்டல ஒருங்கிணைப்பாளர், தேனி மாவட்டம்;-

இவர் பேசுகையில், "நாம் தமிழர் கட்சியின் சார்பாக இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் நான் பங்கேற்றுள்ளேன். கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போடி சட்டமன்றத் தொகுதியில் இந்த மண்ணில் நான் வேட்பாளராக போட்டியிட்ட போது, "நாங்கள் சொன்ன வாக்குறுதியின்படி, நாங்கள் வெற்றி பெற்றாலும், பெறாவிட்டாலும், மக்கள் பிரச்சினை என்றால் வந்து நிற்போம்" என்று வாக்குறுதி அளித்தோம். அந்த வாக்குறுதியின் அடிப்படையில் தான் இன்றும் இங்கு வந்து நிற்கிறோம். எங்கள் இயக்கத்தின் கோட்பாடு. "மூத்தவர்களை தெய்வங்களாக மதிப்பது, இயற்கையை பாதுகாப்பது". அந்த இயற்கைக்கு பிரச்சனை என்பதால் நாங்கள்

வந்திருக்கிறோம். இந்தக் கருத்துக் கேட்பு கூட்டத்தில் நீங்கள் உங்கள் கருத்துகளைப் பதிவு செய்கிறீர்கள்; நாங்களும் எங்கள் கருத்துகளைச் சொல்கிறோம்.

எது நல்லதோ, யாருக்கு நல்லதோ, எது தேவை என்பதை அரசு அதிகாரிகள் முடிவு செய்வார்கள். அதில் எங்களுக்கு பிரச்சனையில்லை. கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் உள்ளது. ஆனால் இந்த அரங்கில் 6-7 காவல்துறையினர் மட்டுமே வைத்துக்கொண்டு இவ்வளவு பெரிய கூட்டத்தை நடத்துகிறீர்கள். ஒரு கூட்டத்தில் ஒருவர் கருத்து தெரிவிக்கிறார். அவரை இத்தனை பேர் சேர்ந்து தாக்க வருகிறார்கள. இதற்கு தகுந்த பாதுகாப்பு செய்த பின்னரே இந்த கூட்டத்தை நடத்தியிருக்க வேண்டும். இப்போது வந்து பேசிய மூத்தவர்கள், "அவர்களை விடுங்கள், அவர்களது கருத்தைத் தெரிவிக்கட்டும்" என்று கூறியதால் அவர்கள் அமைதியாக உட்கார்ந்துள்ளனர். இங்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் யார் பொறுப்பேற்பது? கூட்டம் முறையாக நடைபெற வேண்டும் இல்லையா. இந்த காவல்துறை எப்படி போதுமானது. இங்கிருக்கும் அனைவருக்கும் வாழ்வாதாரம் முக்கியம், அடிப்படை தேவைகள் இருக்கிறது.

நாம் அனைவரும் வாழ வேண்டும். இங்கு எடுக்கக்கூடிய மணலோ, கல்லோ இங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு பயன்படுகிறது என்றால் அதில் எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால் இங்கிருந்து மண்ணும், மணலும், கல்லும் தினமும் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. கேரளாவில் இல்லாத மண்ணும், மலையும் இங்கு இல்லை. அதை விட இங்கு குறைவாகவே இருக்கிறது. தினமும் இரவில் முந்தல் வழியாகப் போடிமெட்டுக்கோ, கம்பம்மெட்டுக்கோ தினமும் 300-400 லாரிகளில் கனிம வளங்களை ஏற்றிக்கொண்டு போகிறார்கள். அதை வேண்டாம் என்று தான் நாங்கள் தடுக்கிறோம். நாம் வீடு கட்டுவதற்கு, ரோடு போடுவதற்கு மண்ணும், கல்லும் தேவை. இந்த தேவைக்கு நாம் எடுத்து பயன்படுத்தினால் அதில் எந்த பிரச்சனையும் இல்லை. தமிழ்நாட்டில் தேனி மாவட்டத்தை "சொர்க்க பூமி"என்கிறோம். இப்போது முன்பிருந்தது போன்றா இருக்கிறது. நமது ஊர், மண் மாறவில்லையா? கொட்டக்குடி ஆற்று தண்ணீர் எவ்வளவு ருசியாக இருந்தது. இப்போது தண்ணீர் போன்றா இருக்கிறது.

இன்று காலநிலை மாறிவிட்டது. முன்பு "Climate Change" என்று சொன்னோம்; இப்போது "Climate Emergency" என்று சொல்ல வேண்டிய நிலை வந்துள்ளது. மரத்தைக் கூட நாம் வைத்து வளர்த்து விடலாம். நீரையும், மலையையும் நாம் உருவாக்கவே முடியாது. தேவை இல்லாத நேரத்தில் மலையை உடைக்க வேண்டாம் என்பதற்காக தான் நாங்கள் இந்த கருத்தைத் தெரிவிக்கிறோம். மலையை யார் காப்பாற்றுவது என்றால் நாம் தான் காப்பாற்ற வேண்டும். எங்கள் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு இந்த குவாரி இந்த மண்ணிற்கு தேவையா என்பதை நீங்கள் முடிவு செய்யுங்கள். அதைமீறி இந்த திட்டத்தை மீண்டும் செயல்படுத்த முயன்றால் நாம்

தமிழர் கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த திட்டத்தை நடக்க விட மாட்டோம்" என்று தெரிவித்தார்.

<u>22. திரு.பாலுசாமி, தோப்புப்பட்டி:-</u>

இவர் பேசுகையில்,"கல்குவாரி வருவதால் எங்களுக்கு எந்தவித இடையூறும் இல்லை. அரசு அதிகாரிகள் தாராளமாக கல்குவாரிக்கு அனுமதி அளிக்கலாம்" என்று தெரிவித்தார்.

23.திருமதி.முத்துகருப்பாயி, தோப்புப்பட்டி:-

இவர் பேசுகையில், "நான் பண்ணைத்தோப்பு மகாநதி குழுவின் தலைவியாக உள்ளேன். இந்த கல்குவாரி இருப்பதால் எங்களுக்கு எந்த கெடுதலும் இல்லை. எங்கள் ஊரில் கோவில் கட்டுகிறோம். எங்கள் ஊரில் நடந்து செல்வதே மிகவும் கடினமாக இருந்தது. சாலை வசதி இல்லை. அதனால், நாங்கள் சொந்தமாக பணம் செலவழித்து சாலை போட்டு வைத்தோம். அந்த சாலையில் தான் மக்கள் அனைவரும் செல்வதற்கும் வசதி ஏற்பட்டது. இப்போது எங்கள் வீதியை வந்துபார்த்தால், அது நன்றாக அமைக்கப்பட்டிருக்கிறது. எங்கள் ஊர் முழுவதும் மண் சுவராகத் தான் இருந்தது. முன்பு தைப்பொங்கல் வந்தாலே மண் எடுத்து பூச வேண்டிய நிலை இருந்தது. ஆனால் இந்த கல்குவாரி வந்த பிறகு எங்களுக்கு குறைந்த செலவில் கிடைப்பதால் ஏழைமக்கள் நாங்கள் வீடும் வாசலும் கட்டிக்கொள்ள முடிந்தது. இன்று எங்கள் பண்ணைத் தோப்பை வந்து பார்த்தால், எவ்வளவு நன்றாக இருக்கிறது என்று பார்க்கலாம். முன்பு பாதையே இல்லாமல் இருந்த ஊர், இன்று சொந்தமாக சாலை போட்டு நல்ல வசதியில் வாழ்ந்து வருகிறோம். அதனால் இந்த கல்குவாரி எங்களுக்கு அவசியமாக தேவை" என்று தெரிவித்தார்.

<u>24. திருமதி.முருகேஸ்வரி, பண்ணைத்தோப்பு:-</u>

இவர் பேசுகையில், "எங்களுக்கு கடந்த 30 ஆண்டுகளாக கோவில் கட்ட முடியாமல் இருந்தது. கல், மண், மணல் எல்லாமே இந்தக் குவாரியிலிருந்தே வந்ததால் நாங்கள் இப்பொழுது கோவில் கட்டிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை; அனைத்து பணிகளும் நன்றாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. எது தேவைப்பட்டாலும், அவர் அதை நேரடியாக கொண்டு வந்து எங்களுக்கு கொடுக்கிறார்கள். எங்கள் ஊரில் தொகுப்பு வீடு, பசுமை வீடு திட்டம் வந்த பிறகு மண், கல் எளிதாக கிடைக்கவில்லை. இந்த குவாரியிலிருந்தே வந்ததால் நாங்கள் அதை பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

5. திருமதி.மாலதி, பண்ணைத்தோப்பு:-

இவர் பேசுகையில், "இதற்கு முன்பு பேசியவர்கள் பல விஷயங்களை கூறினார்கள் 'கேரளாவிற்கு கனிம வளம் அனுப்புகிறார்கள்' என்று. ஆனால் பண்ட மாற்று முறை' என்று ஒன்று உள்ளது என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். நாம் இங்கிருந்து பொருட்கள் அனுப்பினால், அங்கிருந்து ஏலக்காய் போன்ற பொருட்கள் கொடுக்கிறார்கள். அரசு ஏற்கனவே ஆற்று மணல் எடுப்பதைத் தடை செய்துவிட்டது. அதற்கு மாற்றாக குவாரிகளில் இருந்து எம்-சாண்ட், பி-சாண்ட் போன்றவற்றை அனுமதி அளித்துள்ளது. இவர்கள் எந்தவித சட்டத்திற்கும் மீறி எதையும்செய்யவில்லை. எம்சாண்ட், பிசாண்ட் இல்லாமல், இதற்கு முன்பு பேசியவர்கள் தங்களின் வீடுகளை கட்டியிருக்க முடியுமா? வேறு ஏதாவது குவாரியிலிருந்து வாங்கி கட்டியிருப்பார்கள். இந்த குவாரி இருப்பது எங்களுக்கு மிகப் பெரிய நன்மை. எங்கள் கோவில் கட்டுகிறோம்; அதற்கு இவர்கள் எம்-சாண்ட், பி-சாண்ட் ஆகியவை கொடுப்பதாக சொல்லியிருக்கிறார்கள். எங்கள் சுற்று வட்டாரத்துக்கும் இதனால் பெரிய பயன் கிடைக்கிறது. நம் வீட்டிற்கு பக்கத்தில் அதிர்வு வருகிறது என்று போர் போடவில்லையா? அது நமது தேவை. இந்த குவாரி எங்களுக்கு தேவையானது. மண் தேவையான ஒன்று. மண் இல்லாமல் என்ன செய்ய முடியும்? மரக்கட்டையால் வீடு கட்ட முடியாது. நமக்கு மண் தேவை. எனவே இந்த குவாரி எங்களுக்கு தேவை. அனுமதி அளித்தால் நன்றாக இருக்கும்" என்று தெரிவித்தார்.

26. திரு.வெள்ளையப்பன், பண்ணைத்தோப்பு:-

இவர் பேசுகையில், "இந்த கல்குவாரி அமைந்ததன் மூலம், போடி ஒன்றியத்தை சுற்றியுள்ள மிகவும் எளிமையான குடும்பங்கள் அதிகம் வசிப்பதால் எங்களுக்கு. இந்த குவாரியில் இருந்து ஜல்லி, கல், மண் மிகவும் குறைந்த விலையில் கிடைப்பதால் மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. ஆகையால், எங்கள் கிராமமும் அதன் சுற்றுவட்டாரத்தை கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இங்கு இந்த கல்குவாரியை அமைத்துக் கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

27. திருமதி.ஜோதிமணி, பண்ணைத்தோப்பு :-

இவர் பேசுகையில், "என் கணவரும், நானும் கல்குவாரியில் வேலை செய்கிறோம்.எல்லாரும் வேலை கொடுப்பார்கள், சம்பளம் கொடுப்பார்கள். ஆனால் அவர் அங்கு வேலை செய்யும் அனைவருக்கும் மூன்று வேளையும் உணவு வழங்கி பசியைப் போக்குகிறார். அந்த குவாரியில் தரமான ஜல்லி கிடைக்கிறது. அதனால் அந்த குவாரி தொடர்ந்து இயங்க வேண்டும் என்று பண்ணைத்தோப்பு மக்கள் அனைவரும் சூரியசெல்வத்திற்கு ஆதரவு அளிக்க நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்" என்று தெரிவித்தார்.

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராததால், மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனுக்கள் ஏதேனும் இருப்பின் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டு கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்யப்பட்டது.

கீழ்க்கண்ட விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது:-

1) பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் குறித்த பொது வெளியீடு-தமிழ் மற்றும் ஆங்கிலம்

2) கிராம நிர்வாக அலுவலர், கோடாங்கிபட்டி அவர்களின் சான்று

3) பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல்

4) பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு குறுந்தகடு

5) சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

6)பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் தபால் மூலம் பெறப்பட்ட மனுக்கள்-111 எண்கள்.

10/12/25     10/12/25

| | | |
|---|---|---|
| மா.சு.சூ.பொ.,/ த.நா.மா.க.வா., | மாவட்ட வருவாய் அலுவலர், | மாவட்ட ஆட்சித் தலைவர், |
| தேனி மாவட்டம் | தேனி மாவட்டம். | தேனி மாவட்டம். |